**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 166/2025 |
| P.W. | : 1 |
| Name | : திருமதி. பெரியகண்ணாள் |
| Father/Husband Name | : திரு. பழனியப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.08.2026.

**எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை :-</u>**

**நான் சிறுவலூர் மீன்கிணறில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். இறந்துபோன தனசேகரன் எனது மகன். பாலாமணி அவரது மனைவி, எனது மருமகள். வந்தனா அவர்களது மகள், எனது பேத்தி. மோனிஷ் அவர்களது மகன், எனது பேரன். எதிரிகள் என் மகளையும், மருமகளையும் குழுவில் பணம் வாங்குவதற்காக அழைத்து செல்வார்கள். எதிரிகள்**

மேற்படியார்களை என்ன டார்ச்சர் செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் நான் சுள்ளிக்கரட்டில் இருந்தேன் அப்போது எனக்கு என் பேத்தி எனக்கு போன் செய்து நாங்கள் அனைவரும் ஜூஸில் மருந்து கலந்து குடித்துவிட்டதாகவும், எங்களால் முடியவில்லை என்றும், எங்கிருக்கிறாய் என்றும் கேட்டார். நான் ஊரில் இருப்பதாகவும், காரை வரவழைத்து மருத்துவமனைக்கு போங்கள் என்றும், நான் மருத்துவமனைக்கு வந்துவிடுதாகவும் சொன்னேன். உடனடியாக என் பக்கத்துவீட்டு பையனின் உதவியுடன் நான் என் மகனின் ஊரான மீன்கிணறுக்கு வந்துவிட்டேன். நான் நின்றுகொண்டிருந்தது நான் வீட்டிற்குள் சென்று பார்த்தேன். டிவி பாக்ஸ் முன்பாக ஜூஸ் பாக்கெட்டில் மருந்து கலந்து குடித்துள்ளது தெரியவந்தது. நாங்கள் நால்வரையும் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு காரில் எடுத்துசென்றோம். சிறிது நேரத்தில் என் மகன் இறந்துவிட்டார். பாலாமணியும் சிறிது நேரத்திலேயே இறந்துவிட்டார். இரண்டு குழந்தைகளையும் 5 மணிக்கு கோவையில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு எடுத்துசென்றார்கள். 10 மணி அளவில் வந்தனாவும் காலமாகிவிட்டார். விடியற்காலை 5 மணிக்கு மோனிஷும் இறந்துவிட்டான். இது குறித்து பக்கத்தில் இருந்தவர்கள் புகார் எழுதிக்கொடுத்தார்கள். அதில் நான் ரேகை வைத்தேன். புகார் அ.சா.ஆ.1. புகாரில் உள்ள விபரங்களை படித்து காண்பித்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு மூன்று மக்கள். தங்கராசு, தனசேகர், அமுதா ஆகியோர்கள். தங்கராசு தோட்டத்தில் குடியிருக்கிறார். அது ஒரு கவுண்டரின் தோட்டம்.

தனசேகரன் குடியிருந்த மீன்கிணறு வீடு வாடகை வீடா, சொந்தமான வீடா என்றால் சொந்த வீடுதான். அதை நானும், என் கணவரும் சேர்ந்து கட்டினோம். என் கணவர் காலமாகிவிட்டார் நான் தனசேகரனுடன் குடியிருந்தேன். நான் குழுவில் கடன் வாங்கினேனா என்றால் 2 குழுவில் கடன் வாங்கியிருந்தேன் குழுவின் பெயர்கள் எனக்கு தெரியவில்லை. நான் பெற்ற கடனை திருப்பி செலுத்திவிட்டேனா என்றால் ஆமாம். மேற்படி குழுவில் பாலாமணியும் கடன் வாங்கியிருந்தார் என்றால் ஆமாம். எதிரிகளிடம் பாலாமணியோ, அல்லது தனசேகரோ கடன் வாங்கியது நேரில் தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் என் முன்பாக தனசேகரிடமோ, பாலாமணியிடமோ கடன் தொகையை கேட்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறும் நாள் தை பொங்கலுக்கு மறுநாள் என்றால் சரிதான். 2 நாட்களுக்கு முன்புதான் போகி பண்டிகை வந்தது என்றால் சரிதான். எதிரிகள் என்னிடமோ, என் மகன் தங்கராசிடமோ தனசேகரும், பாலாமணியும் குழுவிற்கு பணம் கட்டவேண்டும் என்று பணம் கேட்கவில்லை என்றால் சரிதான். புகாரில் பல இடங்களில் கடன் வாங்கியதாகத்தான் சொல்லியுள்ளேன் எதிரிகளிடம் கடன் வாங்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் பெருந்துறையில் வைத்து எழுதப்பட்டது. எந்த தேதி, மாதம், வருடம் என்றால் தை மாதம் தான் தெரியும் ஆங்கில மாதம், வருடம் எனக்கு தெரியாது. புகார் கொடுத்த பின்னிட்டு என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 4 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். மருத்துவமனைக்கு மேற்படியார்களை கொண்டு சென்ற நாளில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை, வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான்.

வந்தனாவுடனும், மோனிஷுடனும் கோவை மருத்துவமனைக்கு யார் சென்றார்கள் என்றால் அவர்களின் மாமா, அம்மத்தா சென்றார்கள் நான் பெருந்துறையிலேயே இருந்துவிட்டேன். ஐயம்மாள், ராமசாமி சென்றார்களா என்றால் ஆமாம். இறந்துபோனவர்களை எங்கு எப்போது அடக்கம் செய்தோம் என்றால் இரவு 8 மணிக்கு பெருந்துறையில் அடக்கம் செய்தோம். நானும், தங்கராசும் இறுதி சடங்கு நடந்த இடத்தில் தான் இருந்தோம் என்றால் சரிதான். அன்றைய தினம் வீட்டிற்கு வந்த சமயம் இரவு 11 மணி இருக்குமா என்றால் ஆமாம். அதன்பின்னிட்டு போலீசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் மறுநாள் போலீசார் வந்தார்கள், வீட்டிலிருந்த பொருட்கள் அனைத்தையும் எடுத்துசென்றார்கள். மறுநாள் வரச்சொல்லி போலீசார் என்னை விசாரித்தனர். போலீசார் என்னை தவிர அப்போது யார் யாரை விசாரித்தார்கள் என்றால் ஊர்மக்கள் அனைவரையும் விசாரித்தார்கள் யார் யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி வீட்டிலிருந்து போலீசார் என்னென்ன பொருட்களை போலீசார் எடுத்துசென்றார்கள் என்றால் நோட் ஒன்றையும், தனசேகரின் போனையும், மருந்து பாட்டில்கள், குடிக்க பயன்படுத்திய பொருட்கள் எடுத்தார்கள் வேறு என்னென்ன பொருட்கள் எடுத்தார்கள் என்று நினைவில்லை. எதிரிகள் தனசேகருக்கும், பாலாமணிக்கும் கடன் ஏதும் கொடுக்கவில்லை என்றும், எனவே நேரடியாகவோ அல்லது போன் மூலமாகவோ டார்ச்சர் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல அவர்களிடம் நேரடியாக கடன் பெறவில்லை, எதிரிகள் மூலமாக குழுவில் தான் கடன் பெற்றார்கள். பாலாமணி எஸ்சிஎம் கம்பெனிக்கு டெய்லராக வேலைக்கு சென்றுகொண்டிருந்தார் என்றால் சரிதான். தனசேகர் கிடைத்த வேலைக்கு

சென்றுகொண்டிருந்தார் அவருக்கு நிரந்தரமாக வேலை எதுவும் இருக்கவில்லை என்றால் சரிதான். எங்களது குடும்பம் பாலாமணியின் நிரந்தரமான வருமானத்தில் தான் நடத்தி வரப்பட்டது என்றால் சரிதான். பாலாமணியின் வருமானத்தில் தான் வந்தனா, மோனிஷ்-ன் கல்விக்கட்டணமும், மருத்துவ செலவும், எனது மருத்துவ செலவும் செய்யப்பட்டு வந்தது என்றால் சரிதான். பாலாமணியும், தனசேகரும் தனக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போவதாகவும், யாரோ பில்லி சூனியம் வைக்கப்பட்டதாக நினைப்பதாகவும் என்னிடம் புலம்புவார்கள் என்றால் சரிதான். போலீசார் பீரோவிலிருந்து எடுத்ததாக கூறும் நோட்டிலும் மேற்படி பில்லி சூனியம் வைத்துள்ளார்கள் என்ற விபரம் எழுதப்பட்டுள்ளதாக போலீசார் படித்து காண்பித்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் ஒரு தபாலையும் போலீசார் எடுத்துசெல்வதாக காண்பித்துதான் எடுத்துசென்றார்கள் என்றால் சரிதான். தனசேகருக்கு போதிய வருமானம் இல்லை என்பதால் அவ்வப்போது வெளியில் கடன் பெற்று குடும்பம் நடத்துவார் என்றால் சரிதான். அவர் நகைகளையும், பைக் புத்தகத்தையும் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அவர் கடன் தவணை தொகையை ஒவ்வொரு மாதமும் செலுத்திவிடுவார், தவணை தவறமாட்டார் என்றால் சரிதான். ஒரு நபர் கூட தனசேகரிடம் கடனை கேட்டு வீட்டிற்கு வந்து சண்டை போட்டதில்லை என்றால் சரிதான். எதிரிகள் வீட்டிற்கு எப்போதும் வந்ததில்லை என்றால் சரிதான். எதிரிகள் தனசேகரிடம் போனில் பேசியதாகவும் எனக்குநேரில் தெரியாது என்றால் சரிதான் ஆனால் வெளியில் போனில் பேசியுள்ளதாக சொல்லியுள்ளார்கள். தனசேகரிடமும், பாலாமணியிடமும் யார் பேசினார்கள் என்ற விபரம் பெயர் குறிப்பிட்டு எனக்கு தெரியாது என்றால்

ஆமாம். போலீசார் கைப்பற்றியதாக கூறும் நோட்டில் அம்மாவை நல்லா பாத்துக்கோ, தேன்மொழி அக்கா எனக்கு கடன்கொடுத்திருந்தார், அவரும் என்னை மன்னித்துவிடட்டும், அவருக்கு திருப்பி செலுத்த என்னால் முடியவில்லை என்று தங்கராசுக்கு எழுதியுள்ளதாகத்தான் போலீசார் சொல்லியுள்ளார்கள் என்றால்சரிதான். தனசேகர் தனக்கு யாரோ பில்லி சூனியம் வைத்துவிட்டதாக அடிக்கடி மனக்குழப்பம் ஏற்பட்டு மனவேதனையில் இருந்தார், பெற்ற கடனை திருப்பி செலுத்துவதற்கு எந்த ஆதாரமும் இல்லை, பைக்கும், நகையும் அடமானத்தில் உள்ளது என்று பெருத்த மனக்குழப்பத்தில் இருந்தார் என்றால் சரிதான். தனக்கு பின்னிட்டு தனது குழந்தைகளும் கஷ்டப்பட கூடாது என்ற நோக்கத்தில் தான் குழந்தைகளுக்கும் மருந்து கலந்துகொடுத்து தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரிதான். அவர்களது மனக்குழப்பம் தான் தற்கொலைக்கு தூண்டியுள்ளது என்றால் சரிதான். அந்த மனக்குழப்பத்தை என்னிடமும், தங்கராசிடமும் சொல்லியிருந்தால் அதை நாங்கள் தடுத்திருப்போம் என்றால் சரிதான். தற்கொலை முடிவானது பாலாமணியும், தனசேகரும் எடுத்த முடிவுதான் என்றால் சரிதான். எதிரிகளின் நடவடிக்கைகள் தற்கொலைக்கு காரணம் இல்லை என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்ததன்பேரில் தான் அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல அவ்வாறு தான் நோட்டில் எழுதியுள்ளார்கள். போலீசார் ஒரே ஒரு நோட்டை தான் எடுத்தார்கள் என்றும், மற்ற ஆவணங்கள் என் மகனும், மருமகளும் எழுதியதுபோல் போலீசாரே தயாரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. கந்துவட்டி தடுப்பு சட்டம் அந்த காலகட்டத்தில் நடைமுறையில் தீவிரமாக இருந்ததால் எதிரிகள் குழுவில் உறுப்பினர்களாக இருந்தநிலையில் அவர்களை

இந்த வழக்கில் தவறாக சேர்த்து போலீசார் வழக்கு பதிவுசெய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் நான் கடன்பெற்ற குழுவில் உறுப்பினர்களாக இருந்தார்களா என்றால் சுமதி ஒரு குழுவில் உறுப்பினராக இருந்தார். போலீசார் என்னை விசாரிக்கும்போது சுமதி குழுவில் இருந்ததை விசாரித்தார்களா என்றால் ஆமாம். நான் கடன் வாங்கிய குழுவிலும் பாலாமணி கடன் வாங்கியிருந்தாரா என்றால் ஆமாம் அந்த கடனை அவர் கட்டி முடித்துவிட்டாரா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் என் மகன் இறப்பதற்கு 6 மாதத்திற்கு முன்பே என் கடனை கட்டி முடித்துவிட்டேன் அந்த குழு முடிவடைந்துவிட்டது என்றால் சரிதான். பாலாமணி அந்த கடனை கட்டி முடித்துவிட்டார் எந்த நிலுவையும் இருக்கவில்லை என்றால் தெரியாது. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை, போலீசாரால் பொய்யாக புனையப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 166/2025 |
| P.W. | : | 2 |
| Name | : | திரு. தங்கராசு |
| Father/Husband Name | : | திரு. பழனியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.08.2026.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் மீன்கிணறில் குடியிருந்து விவசாய கூலியாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. இறந்துபோன தனசேகர் எனது தம்பி. பாலாமணி அவரது மனைவி. வந்தனா மற்றும் மோனிஷ் அவர்களது மக்கள். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 15-01-2025 அன்று நான் என் வீட்டில் இருக்கும்போது ஆம்புலன்ஸ் சத்தம் கேட்டது நான் வெளியே ஓடிவந்து பார்த்தேன். தனசேகர்,

பாலாமணி ஆகியோர் மயக்கம்போட்டு அவர்களது வீட்டில் கிடந்தார்கள். வந்தனா, மோனிஷ் வயிறு வலிப்பதாக அலறிக்கொண்டிருந்தார்கள். நான் வீட்டிற்குள் போய் பார்த்தேன். அக்கம்பக்கத்தில் இருந்தவர்களின் உதவியுடன் ஆம்புலன்ஸ் வரவழைத்து பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு எடுத்துசென்றேன். ஒருமணிநேரத்தில் பாலாமணி இறந்துவிட்டார். பின்னிட்டு 45 நிமிடம் கழித்து தனசேகரன் இறந்துவிட்டார். வந்தனா மற்றும் மோனிஷை கோவை மருத்துவமனைக்கு எடுத்துசென்றார்கள். கோவையில் வந்தனா இரவு காலமாகிவிட்டார். மோனிஷ் மறுநாள் விடியற்காலையில் காலமாகிவிட்டார். நான் தனசேகரின் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது மருந்து டப்பா, ஜூஸ் பாக்கெட்டுகள், விவசாயத்திற்கு பயன்படுத்தும் சல்பாஸ் மாத்திரைகள் கிடந்தது. என் தம்பி அடிக்கடி என்னிடம் வந்து கடன் எப்படி கட்டுவேன் என்று தெரியவில்லைஎன்று புலம்புவார். எதிரிகள் தன்னை டார்ச்சர் செய்வதாகவும் புலம்பினார். 10 நாட்களுக்கு முன்பிருந்தே புலம்பினார். இறந்துபோன தம்பி, அவரது மனைவி, மற்றும் குழந்தைகளை மருத்துவமனையில் போஸ்ட்மார்ட்டம் முடித்து பெருந்துறையில் அடக்கம் செய்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தனசேகரின் வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி குடியிருக்கிறேன் என்றால் 200 மீட்டருக்கும் அதிகமாக இருக்கும். தனசேகரனுடன் தான் என் தாயார் குடியிருந்தார் என்றால் சரிதான். தனசேகரன் அவ்வப்போது கிடைக்கும் வேலைக்கு சென்று வந்தார் என்றால் சரிதான். பாலாமணி நிரந்தரமாக எஸ்சிஎம் கம்பெனியில் டெய்லராக வேலைக்கு சென்று வந்தார் அவரது வருமானத்தில் தான்

குடும்பம் நடத்தப்பட்டது என்றால்சரிதான். வருமானம் போதாது என்பதால் என் தம்பி வெளியில் கடன் வாங்கி தான் குடும்பத்தை சமாளித்தார் என்றால் சரிதான். எதிரிகள் டார்ச்சர் செய்ததாக போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மோனிஷ் மற்றும் வந்தனாவுடன் ஆம்புலன்சில் யார் கோவை மருத்துவமனைக்கு சென்றார்கள் என்றால் ஐயம்மாள் மற்றும் ராமசாமி சென்றார்கள். போஸ்ட்மார்ட்டம் முடித்து கோவையிலிருந்து மோனிஷ் மற்றும் வந்தனாவின் உடல்கள் எப்போது பெருந்துறைக்கு வந்தது என்றால் மாலை 5 மணியிலிருந்து 7 மணிக்குள் இருக்கும். அந்த உடல்கள் வந்தபிறகுதான் எரியூட்ட செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். 4 உடல்கள் எத்தனை மணிக்கு தகனம் செய்ய ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடிவடைந்தது என்றால் 8 மணிக்கு ஆரம்பித்திருக்கலாம். பாலாமணியின் உடலுடன் மோனிஷின் உடலையும் எரியூட்டினார்கள். தனசேகரையும், வந்தனாவையும் ஒரே சமயத்தில் எரியூட்டினார்கள். இறுதி சடங்கு நிகழ்வுகள் அனைத்தும் 12 மணிக்கு முடிந்ததா என்றால் நாங்கள் 10 அல்லது 10.30 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டோம். 15 ம் தேதி இரவிலிருந்து உடல்களை எரியூட்டும் வரை பெருந்துறையில்தான் இருந்தோமா என்றால் இல்லை எங்களை வீட்டிற்கு செல்ல சொல்லிவிட்டார்கள். இரவு வீட்டிற்கு செல்ல சொல்லிவிட்டார்கள். சாட்சி 4.30 மணி அளவில் குழந்தைகளை கோவைக்கு எடுத்துசென்றுவிட்டார்கள் எனவே எங்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள் என்று கூறுகிறார். பெருந்துறை மருத்துவமனைக்கு மறுநாள் காலை எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 16.01.2025 அன்று காலை 9 மணிக்கு சென்று இரவு 10 மணி வரை பெருந்துறையில் இருந்தோம். சிறுவலூர்

போலீசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் 15ம் தேதி நாங்கள் பெருந்துறை மருத்துவமனையில் இருக்கும்போது அங்கு வந்தார்கள் மறுபடியும் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். தகனம் முடிந்து எப்போது போலீசார் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் அடிக்கடி வீட்டிற்கு வந்து விசாரித்துக்கொண்டு தான் இருந்தார்கள். யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கியிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் அவர்கள் சொல்லவில்லை. அடிக்கடி தம்பிக்கும், அவரது மனைவிக்கும் உடல்நிலை சரியில்லாமல் போவதுண்டு என்றால் சரிதான். மேற்படியார்கள் என்னிடம் ஏதோ பில்லி சூனியம் வைத்துவிட்டதாக அதனால் உடல்நிலை சரியில்லாமல் போனதாக சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. போலீசார் என்னிடம் ஏதாவது ஆவணத்தை படித்து காண்பித்தார்களா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் என் இறப்புக்கு பின்னிட்டு அம்மாவை நன்றாக பார்த்துக்கொள்ளுமாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் வண்டி புத்தகத்தையும், நகையையும் அடமானம் வைத்துவிட்டதாகவும், கடன் கட்ட முடியாமலும் உள்ளேன் என்று படித்து காண்பித்தார்கள் என்றால் சரிதான். தேன்மொழி அக்காவிடம் கடன் பெற்றுள்ளதாகவும், அதை திருப்பி செலுத்த இயலவில்லை என்றும், என்னை மன்னித்துக்கொள்ளுமாறும் படித்து காண்பித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் ஒரு தபால்தான் படித்து காண்பித்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளின் பெயர்களை சொல்லி அவர்களிடம் கடன் பெற்றதாகவும், அவர்கள் டார்ச்சர் செய்வதாகவும் சொல்லவில்லை என்றால் பெயர்களை சொல்லிசொல்லவில்லை ஆனால் கடன் பெற்றுள்ளதாகவும், டார்ச்சர் செய்தாகவும் சொல்லியுள்ளார். தனசேகர் உயிருடன் இருக்கும்வரை கடன்

தொகை கேட்டு யாரும் வீட்டிற்கு வந்ததில்லை, கடன் தொகையை சரியாக தவணை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் நால்வரும் என் தம்பிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அவர்கள் டார்ச்சர் செய்யவில்லை என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது. நானோ எனது தாயாரோ எதிரிகளுக்கு எதிராக எந்த குற்றச்சாட்டும் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**